## துணுக்காய் பிரதேச சபை

## முல்லைத்தீவு மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 13 யூலை 2020 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 05 அக்டோபர் 2020 ஆம் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள் அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து துணுக்காய் பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போதும் இவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகளினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றோம். |

**(ஆ) பொருண்மையான கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கூட்டுமொத்தம் ரூபா 63,665 பெறுமதியான 19 எண்ணிக்கையான அலுவலக உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தளபாடங்களும் பொருத்துக்களுமாகக் காட்டப்பட்டுள்ளமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 63,665 ஆல் தளபாடங்களும் பொருத்துக்களினதும் பெறுமதி கூட்டிக் காட்டப்பட்டிருந்த அதேவேளை அலுவலக உபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கூட்டுமொத்தம் ரூபா 63,664.50 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் 2014, 2015 ம் ஆண்டுகளில் இருந்து தவறுதலாக தளபாடம் உபகரணம் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. ஆகவே இது உரிய அனுமதி பெறப்பட்டு இவ்வாண்டு இறுதிக் கணக்கறிக்கையில் சீர்செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சபைக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் 25 வகையான கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் பெறுமதிகள் கடந்த 05 தொடக்கம் 09 ஆண்டுகளாக மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையால் நிதிக்கூற்றுக்களில் அவற்றின் பெறுமதிகள் விடுபட்டிருந்தன. | அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர் அல்லது அரச விலை மதிப்பீட்டாளரின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் கொண்டுவரப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | குறித்த 25 வகையான கணினி மற்றும் உதிரிப்பாகங்களுக்கான பெறுமதிகள் விலை மதிப்பீட்டிற்கான குழுவினுடாக மதிப்பீடு செய்யவும் இவ்வாண்டு கணக்கறிக்கையில் அவற்றின் பெறுமதியை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. |
| (iii) | கூட்டுமொத்தம் ரூபா 521,000 பெறுமதியான மூன்று பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் அலுவலக உபகரணங்களாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக் கூற்றுக்களில் ரூபா 521,000 ஆல் அலுவலக உபகரணங்களின் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கூட்டுமொத்தம் ரூபா 521,000.00 பெறுமதியான பொறித்தொகுதிகள் 2013, 2016, 2018 ம் ஆண்டுகளில் இருந்து தவறுதலாக அலுவலக உபகரணங்கள் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. ஆகவே இது உரிய அனுமதி பெறப்பட்டு இவ்வாண்டு இறுதிக் கணக்கறிக்கையில் சீர்செய்யப்படும். |
| (iv) | கூட்டுமொத்தம் ரூபா 360,600 பெறுமதியான இரு இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தளபாடங்களும் பொருத்துக்களுமாகக் காட்டப்பட்டுள்ளமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 360,600 ஆல் தளபாடங்களும் பொருத்துக்களினதும் பெறுமதி கூட்டிக் காட்டப்பட்டிருந்த அதேவேளை பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கூட்டுமொத்தம் ரூபா 360,600.00 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் தவறுதலாக தளபாடம் பொருத்துக்கள் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. ஆகவே இது உரிய அனுமதி பெறப்பட்டு இவ்வாண்டு இறுதிக்கணக்கறிக்கையில் சீர்செய்யப்படும். |
| (v) | கூட்டுமொத்தம் ரூபா 999,970 பெறுமதியான 28 கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அலுவலக உபகரணங்களாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 999,970 ஆல் அலுவலக உபகரணங்களின் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை கணினி மற்றும் உதிரிப்பாகங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கூட்டுமொத்தம் ரூபா 1,275,020.00 (999,970.00 உள்ளடங்கலாக) பெறுமதியான கணிணி மற்றும் உதிரிப்பாகங்கள் தவறுதலாக அலுவலக உபகரணங்கள் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. ஆகவே இது உரிய அனுமதி பெறப்பட்டு இவ்வாண்டு இறுதிக்கணக்கறிக்கையில் சீர்செய்யப்படும் |

| | | | |
|---|---|---|---|
| (vi) | கூட்டுமொத்தம் ரூபா 6,765,902 பெறுமதியான 504 தளபாடங்களும் பொருத்துக்களும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அலுவலக உபகரணங்களாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,765,902 ஆல் அலுவலக உபகரணங்களின் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை தளபாடங்களும் பொருத்துக்களினதும் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கூட்டுமொத்தம் 6,765,902 பெறுமதியான தளபாடங்கள் பொருத்துக்கள் தவறுதலாக 2014, 2017, 2018 ம் ஆண்டுகளில் இருந்து அலுவலக உபகரணங்கள் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. ஆகவே இது உரிய அனுமதி பெறப்பட்டு இவ்வாண்டு இறுதிக்கணக்கறிக்கையில் சீர்செய்யப்படும் |
| (vii) | கூட்டுமொத்தம் ரூபா 285,290 பெறுமதியான 08 கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தளபாடங்களும் பொருத்துக்களுமாக காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 285,290 ஆல் தளபாடங்களும் பொருத்துக்களின் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை கணினி மற்றும் உதிரிப்பாகங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கூட்டுமொத்தம் ரூபா 285,290 பெறுமதியான 8 கணிணி மற்றும் உதிரிப்பாகங்கள் என்பன 2017, 2018 ம் ஆண்டுகளில் இருந்து தவறுதலாக தளபாடம் பொருத்துக்கள் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. ஆகவே இது உரிய அனுமதி பெறப்பட்டு இவ்வாண்டு இறுதிக் கணக்கறிக்கையில் சீர்செய்யப்படும். |
| (viii | சபைக்குரித்தான 33 அலுவலக மற்றும் தளபாட உபகரணங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கடந்த 05 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்ளுக்கு கொண்டு வரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அவற்றின் பெறுமதிகள் விடுபட்டிருந்தன. | பெறுமதிகளை அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர் அல்லது அரச விலை மதிப்பீட்டாளரின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் கொண்டு வரப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | குறித்த 33 வகையான அலுவலக மற்றும் தளபாட உபகணங்களின் பெறுமதிகள் விலைமதிப்பீட்டிற்கான குழுவினுடாக மதிப்பீடு செய்யவும் இவ்வாண்டு கணக்கறிக்கையில் அவற்றின் பெறுமதியை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுமொத்தம் ரூபா 39.64 மில்லியன் பெறுமதியான இருபத்தொன்பது சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கு மற்றும் இரு அரசிறைக் கடனாளிகள் கணக்கு என்பவற்றுக்கான மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குக் கிடைத்திருக்காமையினால் அவற்றினை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று சான்றுறுதிப்படுத்தமுடியாதிருந்தது. | குறிப்பிடப்பட்டிருக்கும் எழுத்து மூல ஆவணங்களினைப் பெற்று உரியவாறு கோவைப் படுத்துவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை மற்றும் சில்லறை கடன்கொடுத்தோர் மீதி என்பவற்றின் உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

### 1.4 இணங்காமைகள்

#### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக விதிகள் | | | |
| (i) | அத்தியாயம; II ,d; பிரிவு 66 | ரூபா 14,652,270 பெறுமதியான வருமான நிலுவைகளினை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான நிலுவைகளினை அறவிட்டுக் கொள்வதற்கு சபையின் செயலாளரினால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் | நிலுவை ரூபா 397,010.00 அறவீடு செய்யப்பட்டுள்ளது. இதில் குத்தகை அறவீடு ரூபா 86681.26 தொடர்பான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குறித்த நபர் இறந்த காரணத்தினால் நிலுவையினை பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. நீதிமன்றத் தண்டம் இனிவரும் காலங்களிலேயே கிடைக்கப் பெறும். |
| (ii) | அத்தியாயம் III இன் பிரிவு 32 | சபையினால் ஆதனவரி மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி கணிப்பிடப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | எமது சபைக்குட்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக எதுவும் பிரகடனப்படுத்தப்படாதிருப்பதனால் ஆதனவரி தொடர்பான கணிப்பிடு மேற்கொள்ளப்படவில்லை. |
| (iii) | அத்தியாயம் III இன் பிரிவு 33 | சோலைவரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சோலை வரி கணிப்பிடப்படுவதற்குரிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | எமது சபைக்குட்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்தியடைந்த பிரதேசமாக எதுவும் பிரகடனப்படாதிருப்பதனால் சோலை வரி தொடர்பான கணிப்பிடு மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | அத்தியாயம் III இன் பிரிவு 59 மற்றும் 60 | வியாபார வரி சம்பந்தமான கணிப்பீடொன்றினை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார வரி கணிப்பீட்டினை மேற்கொன்டு அதனை அறவிட்டுக் கொள்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எமது சபைக்குட்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்தியடைந்த பிரதேசமாக எதுவும் பிரகடனப்படாதிருப்பதனால் வியாபார வரி தொடர்பான கணிப்பிடு மேற்கொள்ளப்படவில்லை. எனினும் வியாபார உரிமங்கள் அறவிடப்படுகின்றன. |
| (v) | அத்தியாயம் IV இன் பிரிவு 108 | துணுக்காயில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவை பராமரிக்க கடந்த இரு வருடங்களாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள இப் பூங்காவினை முறையாகப் பராமரித்து சிறுவர்கள் பயன் படுத்துவதற்கு ஏதுவாக மாற்றியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | யோகபுரம் மத்தி சிறுவர் பூங்காவிற்கான வேலைகள் நிதிப் பற்றாக்குறையால் இன்னும் முடிவுறுத்தப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் சபைநிதி மூலமாகவோ/ஏனைய நிதியுதவிகள் மூலமாகவோ இதற்கான நிதி ஏற்பாடுகளை பெற்று வேலைகளை முடிவுறுத்தி பூங்காவை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (vi) | அத்தியாயம் V இன் பிரிவு 140 | ஐந்து ஒப்பந்தகாரர்களுக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டன. ரூபா 3,297,000 | ஒப்பந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக் காத நிலையில் ஒப்பந்த தாரர்களுக்கு முற்பணம் செலுத்தப்படுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். | ரூபா 3,197,000 இவ் வருடம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. ரூபா.40,000 வேலை முடிவுற்றதும் சீர்செய்யப்படும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்** | | | |
| | இலக்கம் 571 | மீளாய்வாண்டில் வைப்புக் கணக்கில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கக்கூடிய மின்கட்டண வைப்புக்கள், கேள்வி வைப்புக்கள், வீதி பராமரிப்பு வைப்புக்கள் மற்றும் ஏனைய 4 வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 142,430 கடந்த 01 தொடக்கம் 15 மாதங்களாக மீளளிக்கப்படாமல் வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு உரிய காலத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | மீளளிக்கக்கூடிய மின்கட்டணம், கேள்விப் பத்திர வைப்புக்கள், என்பன சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| **(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள்**<br>29 திசெம்பர் 2016 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்கம் | சபையின் இரு வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் சகல அலுவலக வாகனங்களுக்கு மான எரிபொருள் நுகர்வு பரி சோதனையினை உரிய கால ஒழுங்கில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | சபையின் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு 2019.07.02 திகதி மேற்கொள்ளப்பட்ட போதிலும் குறித்த காலப்பகுதியின் பின்னர் கிடைக்கப்பெற்ற 2 வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வு பரீசிலனை மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாண்டில் உரிய காலப்பகுதியில் மேற்படி பரிசீலனை மேற்கொள்ளப்படும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,883,071 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,337,630 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரிகள் | 170,000 | 384,900 | 384,900 | - | - | - | - | - |
| (ii) | வாடகைகள் | 16,234,320 | 5,196,522 | 4,603,784 | 679,419 | 4,485,450 | 2,656,630 | 2,609,480 | 151,131 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 933,300 | 632,300 | 632,300 | – | 1,054,000 | 796,000 | 796,000 | – |
| (iv) | ஏனைய வருமானம் | 10,375,592 | 16,489,393 | 5,199,527 | 13,972,850 | 6,847,500 | 11,895,397 | 4,776,856 | 10,038,205 |
| | **மொத்தம்** | **27,713,212** | **22,703,115** | **10,820,51** | **14,652,269** | **12,386,950** | **15,348,027** | **8,182,336** | **10,189,336** |

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 31 திசெம்பர் 2019 இலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வருமான நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 14,652,270 இனை 01 சனவரி 2019 இலிருந்த வருமான நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 10,189,335 மீளாய்வாண்டிற்கான மொத்த பட்டியலிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 22,703,115 மற்றும் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த மொத்த வருமானம் என்பவற்றுடன் தொடர்புபடுத்திப் பரீட்சித்து அதன் உண்மையானதும் செம்மையானதுமான தன்மையினைக் கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்படாதுள்ள வருமான நிலுவைகளினை இணக்கம் காட்டக்கூடியதாக கணக்குகள் தயாரிக்கப்படுவதுடன் நிதிக்கூற்றுக்களிற்கும் உரியவாறு கொண்டுவரப்பட்டிருக்க சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிராமையும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையாலேயுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டிருந்தன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையானது கடை வாடகை, ஆட்டோ வாடகை, குத்தகைக் கட்டணங்கள், கழிவகற்றல் கட்டணம், மோட்டர் கிறேடர் வாடகை போன்றவற்றினை உரியவாறு அறவிட்டுக்கொள்வதில் நலிவான நிலை அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த கூட்டுமொத்த வருமானம் ரூபா 12.566 மில்லியனானது மீளாய்வாண்டிற்குரிய அத்தகைய வருமான நிலுவைகள் ரூபா 17.03 மில்லியனில் 73.78 சதவீதமாகவும் நேர்முன்னைய ஆண்டுகளிலுமாக அறவிடப்படவேண்டியதான கூட்டுமொத்தம் ரூபா 27.22 மில்லியனில் 46.16 சதவீதமாகவும் இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள வருமான நிலுவைகளின் வயதுப் பகுப்பாய்வு கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | வருமானங்களினை அறவிட்டுக் கொள்வதற்கும் வருமான நிலுவைகளினை தவிர்த்துக் கொள்வதற்கும் சபையின் செயலாளரினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிலும் நேர்முன்னைய ஆண்டுகளுக்குமான கடை வாடகை, மோட்டர் கிறேடர் வாடகை, மாதாந்த கழிவகற்றல் கட்டணம், முச்சக்கரவண்டி வாடகை, குத்தகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 814,319 இனை அறவிடப்பட்டிருக்க கடந்த 01 தொடக்கம் 07 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சேரவேண்டிய வருமானங்களினை உரியவாறு உரிய காலப்பகுதிளில் கிரமமாக அறவிட்டுக் கொள்வதற்கு சபையின் செயலாளரினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | ரூபா 330,628 இவ் ஆண்டில் அறவீடு செய்யப்பட்டுள்ளது. மிகுதி அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,836,466 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 1,485 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | வடக்குமாகாண பிரதம செயலாளரிடமிருந்து உரிய காலத்தினுள் பெற்றுக் கொள்வதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நீதிமன்றத் தண்டம் இனிவரும் காலங்களிலேயே கிடைக்கப்பெறும். மற்றும் முத்திரைதீர்வை கட்டணம் ரூபா 1,485.00 அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் எவ்விதமான உபவிதிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சபையானது உப விதிகளை உருவாக்கி கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய அனைத்து வகையான செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரித்து அதற்கான செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | ஏற்கனவே தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்துவதற்கு சபையினால் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கப்படவில்லை. | கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் நாளொன்றுக்கு அண்ணளவாக 0.6 தொன் குப்பைகளே சேர்க்கப்படுகின்றது. இக் குப்பைகளை உக்கக்கூடிய கழிவுகள், தகரங்கள், போத்தல் ஓடுகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களென தரம்பிரிக்கப்பட்டு வருகிறது. மேலும் எமக்கு கிடைக்கப்பெறுகின்ற குப்பைகள் Compost முறை மூலம் பயன்படுத்துவதற்கு போதாமையாலும் அதற்குரிய இயந்திர செலவீனம் அதிகமாக காணப்படுவதாலும் மீள்சுழற்சி முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு சபையினால் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகளைப் போன்றே செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கடந்த இரு ஆண்டுகளாக உருவாக்கப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உருவாக்கப்பட்டு அவற்றின் வருடாந்த செயன்முன்னேற்றங்களை அறிந்து கொள்வதற்கான குறிகாட்டிகளையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களிலும் திட்ட முன்மொழிவுகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் யாவும் நீண்டகால அபிவிருத்தியை நோக்கியதாகவே மேற்கொள்ளப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையானது பாதீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளினை மேற்கொள்ளாது கூட்டுமொத்தம் ரூபா 33.186 மில்லியன் கடந்த 01 தொடக்கம் 11 ஆண்டுகளாக வங்கியொன்றின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | பொதுமக்களுக்குப் பயனளிக்கக் கூடிய செயற்றிட்டங்களில் அவற்றினை முதலீடு செய்வதற்கும் பொது நன்மையினை ஏற்படுத்தக்கூடிய வகையில் அந்நிதியினை பயன்படுத்தி வருமான மீட்டலை அதிகரித்துக் கொள்வதற்கும் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எமது சபையின் நிலையான வைப்புக்களானவை 2016ம் ஆண்டிற்கு பின்னர் வைப்புச்செய்யப்படாததுடன் மேற்படி வைப்புக்கள் மீளப்பெறப்பட்டு சபையின் அபிவிருத்தி மற்றும் வருமானமீட்டும் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 4.9 மில்லியன் மில்லியன் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட 12 மூலதன வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிராது முற்றாகக் கைவிடப்பட்டிருந்தன எவ்வாறாயினும் இதற்குரிய காரணங்கள் கணக்காய்வுக்குக் கிடைத்திருக்கவில்லை. | அங்கீகரிக்கப் பட்டிருந்தவாறு சபையின் வருடாந்த பாதீட்டு விடயங்களை உரியவாறு செயற்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | சபைத் தீர்மானத்தின்படி பதிலீடாக வேறு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளது. இரு வேலைகள் தீர்மான இலக்கம் :- 326/2019 அமைய PSDG முற்பணம் வழங்கப்பட்டுள்ளது |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் நூலகர், சந்தை மேற்பார்வையாளர் ஆகியோர் நாளதுவரை நியமிக்கப்பட்டிருக்காமையால் நூலகப் பயன்பாடுகள் மற்றும் சந்தைச் செயற்பாடுகளினை கவனித்தலில் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.<br>சபைக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆளணியினரை விஞ்சியதாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரொருவர் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தமை | அத்தகைய பதவியினரை உரியவாறு பெற்றுக்கொண்டு சபையின் செயற்பாடுகளை செவ்வனே மேற்கொள்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படுதல் வேண்டும்.<br>மிகை ஆளணி தொடர்பில் வடக்கு மாகாண cs;@uhl;rp ஆணையாளருக்கு அறியக் கொடுக்கப்பட்டு | வருடாந்த இடமாற்றத்தின் பின்னர் தற்போது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அனுமதிக்கப்பட்ட ஆளணியினரே உள்ளனர். சந்தை மேற்பார்வையாளர் வெற்றிடம் எமது உள்வாரியான பதவியணியில் தகைமையுடையோர் இல்லாததால் வெளிவாரியாக நியமிப்பதற்கு அனுமதி கோரி வடக்கு மாகாண உள்;ராட்சி ஆணையாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மீள எனது லே.14.44(05).01.08.2019 இலக்க 23.07.2019 ந்திகதிய கடித மூலம் சந்தை மேற்பார்வையாளர் பதவி வெற்றிடம் வெளிவாரியாக நிரப்பக்கோரி மீள பிராந்திய உள்;ராட்சி உதவி ஆணையாளர் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஆளணி பரவலாக்கப் படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | அவர்க;டாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அத்துடன் எமது பொதுநூலகததிற்கென நூலகர் நியமிக்கப்படாமையால் வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதைச் சுட்டிக்காட்டி வெற்றிடம் நிரப்பக்கோரி உரிய அதிகாரிகளுக்கு எனது வே.்.14.்.44(05).்.01.்.11.்.2018 இலக்க 23.07.2018 12.09.2018 ந்திகதிய கடித மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பல்வேறுபட்ட புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகளுக்கு இரு ஒப்பந்தகாரர் மற்றும் மூன்று சனசமூக நிலையங்களுக்கு மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 3.30 மில்லியன் சபை நிதியிலிருந்து முற்பணமாகச் செலுத்தப்பட்டு அவை நாளதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காத 05 சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | ஒப்பந்த வேலைகள் நிறைவேற்றப் பட்டிருக்காத நிலையில் ஒப்பந்த தாரர்களுக்கு முற்பணம் செலுத்தப்படுதல் தவிர்கப்படுதல் வேண்டும். | ரூபா 3,197,000 இவ் வருடம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. ரூபா 40,000 வேலை முடிவுற்றதும் சீர் செய்யப்படும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்வேறுபட்ட அரச மற்றும் தனியார் அமைப்புக்களினால் சபைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த நீர்தாங்கி, உழவு இயந்திரம் போன்ற 05வாகனங்களினை சபைக்குரியதாக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்க நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு உடமை மாற்றப்பட்டிருக்காது சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் வாகனங்களினை சபைக்குரித்தானவையாக மாற்றம் செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| (ஆ) கூட்டுமொத்தம் ரூபா 79.48 மில்லியன் பெறுமதியான காணி, கட்டடங்கள் சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அவை சபைக்குரித்தானவையாக்கப்பட்டிருந்தமைக்கான காணி உறுதிப்பத்திரங்கள், நில அளவை வரைபடங்கள், கோவைகள் என்பன காணப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரியதான காணி உறுதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கும் ஆதனங்களை மதிப்பீடு செய்து அவற்றின் நியாயமான பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கும் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | **(அ)**குறித்த காணிகளுக்கான நில அளவை வரைபடங்கள் காணப்படுகின்றது. மேலும் காணி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு காணி ஆணையாளரூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு காணிகளை மதிப்பீடு செய்வதற்காக காணி மதிப்பீட்டு திணைக்களத்திடமும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. **(ஆ)** 25 கட்டடங்களுக்கான பெறுமதி மதிப்பீட்டு சாண்றிதழ்கள் மற்றும் வேலை கோவைகள் என்பன சபையில் காணப்படுகின்றன. |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த நீர்ப்பம்பி, கையுழவியந்திரம் என்பனவற்றை கடந்த 10 வருடங்களாக திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கேற்றவகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இவற்றினை திருத்தம் செய்து உபயோகப்படுத்துவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 3.5.3 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 10 கூரைத்தகடுகள் கடந்த 01 வருடத்திற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் களஞ்சியசாலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பெறுமதியும் கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | இக் கூரைத்தகடுகளின் பெறுமதியினை தெரியப்படுத்தி அவை களஞ்சியத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ள மைக்கான காரணங்களை கண்டறிந்து உரியவாறு பயன்படுத்துவதற்கேற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான சபையின் வரவுசெலவுத்திட்டம் சரியான பொறிமுறையினூடாக திட்டமிட்டு தயாரிக்கப்பட்டிருக்காமையால் ஐந்து வகையான மதிப்பிடப்பட்ட செலவினம், உண்மைச் செலவினம் என்பவற்றிற்கிடையே சாதகமான வேறுபாடுகள் முறையே 09 சதவீதம் தொடக்கம் 68 சதவீதம் வரையிலும் ஆறு வகையான மதிப்பிடப்பட்ட வருமானம் உண்மை வருமானம் என்பவற்றிற்கிடையே பாதகமானதும் சாதகமானதுமான வேறுபாடுகள் முறையே 32 சதவீதம் தொடக்கம் 126 சதவீதம் வரையிலும் ஏற்பட்டிருந்தன. | சபையானது பொருத்தமான அடிப்படைகளைக் கருத்திலெடுத்து நடைமுறைக்கு சாத்தியமான வருடாந்த வரவு செலவு திட்டத்தினை தயாரித்து பொதுமக்களின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பித்து அவற்றினை வினையாற்றலுடன் செயற்படுத்துவதங்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டு உள்ளபோதிலும் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சிநிரல் மற்றும் உள்ளகக் கணக்குப் பரிசோதனை அறிக்கைகள் என்பன கடந்த இரு ஆண்டுகளாக கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சி நிரல் மற்றும் உள்ளகக் கணக்குப் பரிசோதனை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டு உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் சிறந்த முறையில் இடம்பெற்று வருவதோடு பரிசோதனை அறிக்கைகள் உள்ளகக் கணக்குப் பரிசோதனை கோப்பில் இடப்பட்டுள்ளதோடு தவறுதலாக தங்களின் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |